**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.87** **நாள்: 20.07.2017**

**உலக மக்கள் தொகை தின விழா விழிப்புணர்வு பேரணியை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்!**

உலக மக்கள் தொகை தினத்தினை முன்னிட்டு, இன்று (20.07.2017) நேரு உள்விளையாட்டரங்கில் இருந்து ரிப்பன் மாளிகை வரை நடைபெற்ற பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

உலக மக்கள் தொகை 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ம் நாள் 500 கோடியை தாண்டிவிட்டது என்ற அபாயத்தை உலக மக்களுக்கு உணர்த்தும் வகையிலே ஐக்கிய நாடுகள் சபை அந்நாளை ''உலக மக்கள் தொகை தினம்'' என்று அறிவித்ததை தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11ம் நாள் உலக மக்கள் தொகை தினம் பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை சார்பாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இன்று (20.07.2016) உலக மக்கள் தொகை தினம் அனுசரிக்கப்பட்டது.

இளம்வயது திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகள் ஏதேனும் உடல்நலக் குறைவுடன் பிறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். இதனை தடுப்பதற்கும், ஆரோக்கியமான சமுதாயம் உருவாவதற்கும் 19 வயதிற்குமேல் முதல் குழந்தையும், தேவையான இடைவெளி விட்டு இரண்டாவது குழந்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். தமிழக அரசு கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பெண்களுக்கு திருமண உதவித் தொகை, மகப்பேறு நிதியுதவித் திட்டம், கல்வி பயில ஏராளமான நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. தமிழக அரசின் திட்டங்களை பயன்படுத்தி கல்வி கற்று மக்கள் தொகை மற்றும் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு விழாவில் அறிவுறுத்தப்பட்டது.

உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். பின்னர், இந்த விழிப்புணர்வு பேரணியானது ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா மாளிகையை வந்தடைந்தது.

இப்பேரணியைத் தொடர்ந்து ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா மாளிகை கலையரங்கில் உலக மக்கள் தொகை தின அனுசரிப்பு விழாவில் நகர சுகாதார செவிலியர்கள், ஆயுர்வேதக் கல்லூரி மாணவ, மாணவியர்கள், சுகாதார பணியாளர்கள் கலந்து கொண்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளிலும், கல்லூரிகளுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திருமதி.எம்.விஜயலட்சுமி, இ.ஆ.ப., பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநர் மரு.ஆர்.மனோகரி, பெருநகர கூடுதல் மருத்துவ அலுவலர்/இணை இயக்குநர் மரு.அன்னப்பூர்ணா, இராயபுரம் மண்டல அலுவலர் திருமதி.சிவசௌந்தர வள்ளி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட சுகாதார பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**